பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | தை 03 புதன்கிழமை 15.01.2025 | அதிர்வு 167

## வெலே சுதா உள்ளிட்ட மூவருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பு



போதைப்பொருள் கடத்தல் மூலம் சட்ட விரோத சொத்துக் களைக்

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# “அரசியல் கைதிகள் இல்லை” என்ற பழைய பல்லவியைப் பாடாமல் அவர்களை உடனே விடுவியுங்கள்!

## அரசிடம் மனோ எம்.பி. இடித்துரைப்பு



“அரசியல் கைதிகள் இல்லை” என்ற பழைய பல்லவியைப் பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

“சிறையில் அரசியல் கைதிகள் இல்லை” என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்கத் தரப்பு அப்படிதான் சொல்வார்கள்.

03

# சிறீதரன், குகதாசன் எம்.பிக்கள் கனேடியத் தூதுவருடன் சந்திப்பு

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அண்மையில் கனடாவுக்குப் பயணமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், அங்கு கனேடியப் பிரதி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையில், குறித்த சந்திப்புகள் தொடர்பிலும், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும் பேசப்பட்ட

03



## பிரித்தாளும் தந்திரோபாயங்களினால்

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒற்றுமையை ஒருபோதும் சிதைக்க முடியாது

### பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"சமூக வலைதளங்களிலும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தலைவரை நியமிப்பது தொடர்பில் திட்டமிட்டிருப்பதாக உறுதி கோராத செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தியில் உண்மை இல்லை. இது தென்னிலங்கை அரசியல் சக்திகளின் சதியாகும்."

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரித்தாளும் தந்திரோபாயங்களினால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒற்றுமையை ஒருபோதும் சிதைக்க முடியாது என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"இலத்திரனியல் ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் தெரிவித்ததாக ஓர் அநாமதேய செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்த அநாமதேய செய்தி தொடர்பாகக் கட்சியின் பேச்சாளர் என்ற வகையில் ஊடகப் பரப்பில் இருப்பவர்கள் என்னுடன் தொடர்புகொண்டு அந்தச் செய்தி தொடர்பான கருத்துகளைக் கேட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பாக இதுவரை நடைபெற்ற கூட்டங்கள் எதிலும் கலந்துரையாடப்படவில்லை என்பதையும், அத்தகைய எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதுடன் எமது யாப்பில் சில மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பிலேயே விவாதித்திருந்தோம் என்பதையும் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



அதேநேரம் ஆளும் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் தமிழ்க் கட்சிகள் தனித்தனியே நின்று தீர்வுக்கான கருத்துகளைக் கூறாமல், ஒன்றுபட்டு ஒரே கருத்தைக் கூறுவார்களாக இருந்தால் அது தொடர்பில் பேசலாம் என்றும் செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள். இது ஒரு வகையில் தமிழ்த் தரப்பின் மீது குற்றங்களைச் சுமத்தி தீர்வை எட்டாமல் செய்வதற்கான அரசின் சாதுர்யமான பிரித்தாளும் தந்திரோபத்தையே காட்டுகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ்த் தரப்புகள் அவதானமாகவும் ஒன்றுபட்டும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை தமிழ் அரசியல் பரப்பில் உள்ளோர் புரிந்துகொள்ள வேண்டும்.

குறுகிய கட்சி நலன்களைக் கைவிட்டு, தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது தொடர்பான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சக்திகளாகவும் வலுவான சக்திகளாகவும் தங்களை தகவமைத்துக் கொள்வதற்கான காலசூழல் ஏற்பட்டிருப்பதாகக் கருதுகின்றோம். இதனைப் பற்றிப் பிடித்து அனைவரும் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்." – என்றுள்ளது.

# வடமராட்சி கிழக்கில் இன்று கரையொதுங்கிய மர்ம வீடு



யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் இன்று அதிகாலை 3 மணியளவில் மர்ம வீடு ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மைக்காலமாக கடல் நிலையில் மாற்றங்களினால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல், நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டன.

இதன்போது மியன்மார், தாய்வான், தாய்லாந்து, மலேஷியா, இந்தியா, போன்ற ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இந்த மர்ம வீடு வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

குறித்த வீட்டில் பௌத்த சமயத்தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் காணப்படுகின்றன.

இந்த வீட்டைப் பார்வையிடுவதற்குப் பல மக்கள் சென்ற வண்ணமுள்ளனர்.

# சீன ஜனாதிபதியுடன் அநுரகுமார முக்கிய விடயங்கள் பற்றி பேச்சு

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்குக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் பேசப்பட்டன.

சீன நாட்டு நேரப்படி மாலை 5 மணிக்கு மக்கள் மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.



# கொழும்பில் ஐஸ் போதைப்பொருளுடன் நீதிமன்றப் பணியாளர் ஒருவர் சிக்கினார்

ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீதிமன்றப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, புதுக்கடையில் உள்ள நீதிமன்றத்தில் கடமையாற்றும் பணியாளரிடமிருந்து 10 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.



மேற்படி பணியாளர் இந்த ஐஸ் போதைப்பொருளைக் கஹவத்த பகுதியில் கொள்வனவு செய்தமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் வெல்லம்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சிறீதரன்...**

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், கனேடியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஒழுங்கமைக்குமாறு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், தூதுவரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

**அரசியல் கைதிகள்....**

அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பாலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்கப் போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படித்தான்.

இந்நாட்டில், 1971 இல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே ஆயுதம் தூக்கிப் பின்னர், 1989 இலும் ஆயுதம் தூக்கி ஜே.வி.பி. போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜே.வி.பி. போராளிகளை, அன்றைய அரசு, "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால், ஜே.வி.பியினர், "இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

2015 - 2019 கால நமது நல்லாட்சியிலும் இடைக்கிடை ஓரிரு அமைச்சர்கள் இப்படிச் சொன்னார்கள். ஆனால், அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களைக் கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களைப் புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும், வெளியே தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில் மாற்று பேச்சுக்கு இடமில்லை. இதனால்தான் இன்று வரை இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.


ஆனால், அன்று ஆயுத போராட்டம் செய்த ஜே.வி.பியே, இன்று இப்படிக் கூறுகின்றது. "அரசியல் கைதிகள் இல்லை" என்று கூறி, அவர்களுக்குப் பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகின்றது. 1971 இல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜே.வி.பி., கைதாகி சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை, அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகின்றது. இந்த இரட்டை வேடம், இவர்களுக்கு இன்று வாக்களித்த செந்தமிழர்களுக்குத்தான் வெளிச்சம்." – என்றார்.

---

**வெலே சுதா....**

குவித்ததற்காகப் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'வெலே சுதா' எனப்படும் சமந்த குமார, அவரது மனைவி மற்றும் மற்றொரு பெண்ணை பண மோசடி சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம், அவர்களுக்கு தலா 8 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து இன்று தீர்ப்பளித்தது.

அத்துடன் அவர்கள் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த பணம், சொத்துக்கள் மற்றும் தங்க நகைகளை பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# விபுலானந்தா கல்லூரியின் பவள விழா நிகழ்வுகள் இன்று

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலாந்த மத்திய கல்லூரியின் 75 ஆவது வருட பவள விழா பிறந்த நாள் நிகழ்வுகள், பொங்கல் மற்றும் கேக் வெட்டலுடன் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இன்று (15) புதன்கிழமை அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் அதிதிகளாகக் கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. சஞ்சீவன், பாடசாலை பழைய மாணவர் சங்க ஆலோசகர் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ரி. வினோதராஜா, பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் எல்.சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



75 ஆவது வருட பிறந்த நாள் கேக் வெட்டல் நிகழ்வு பட்டாசு வாண வெடிகள் முழங்க, பலவர்ண பட்டாசு மழை தூவ, மாணவர்களின் கரகோஷம் மண்டபத்தை அதிரவைக்க மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

அதிதிகள் ஆசிரியர்கள் கேக் பரிமாறி மகிழ்ச்சியாக கொண்டாடினர்.

பாடசாலையின் 75 ஆம் ஆண்டு நிறைவு பவளவிழாவைச் (1950-2025) சிறப்பிக்கும் வகையில் நிகழ்வுகள் பல தொடர்சியாக இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயங்காத பொருளாதார மையங்களை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## வடக்கு ஆளுநரிடம் சர்வதேச இந்துமத பீடம் கோரிக்கை

கடந்த காலங்களில் பொருளாதார மைய நிலையங்கள் வவுனியாவிலும் மட்டுவிலிலும் பல கோடிக் கணக்கில் நிதி செலவிடப்பட்டு அமைக்கப்பட்டன. இயங்கா நிலையில் உள்ள அவற்றை இயங்க வைக்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேச இந்துமத பீடச் செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறிப்பாக வன்னி பிரதேசத்தின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் அதன் மூலம் அந்த விவசாயிகளுக்கு ஆக்க பூர்வமான பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும் இந்த பொருளாதார மையங்கள் உதவுகின்றன.

ஜனாதிபதி அநுர குமார திசைநாயக்க இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளுக்கு நிச்சயமாக உரிய ஆக்க பூர்வமான நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மிகவும் ஆர்வமாகச் செயற்படுகின்றார்.

இந்த வகையில் வட மாகாண ஆளுனர் நாகலிங்கம் வேதநாயகம் இது சம்மந்தமாக ஜனாதிபதிக்குத் தெரியப் படுத்தி, இயங்காமல் இருக்கும் இந்தப் பொருளாதார மையங்களை இயங்குவதற்கும் விவசாய சந்தை பொருள்களைச் சந்தைப்படுத்தவும் உற்பத்தியாளர்களுக்கு பொருளாதார வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அதிக பொறுப்புணர்வுடன் இப்போது இருக்கும் ஆளுநர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.- என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ராஜதந்திர பிரலாபம்

‘புதிய இந்தியாவின் தலைமைத்துவம் மற்றும் பொருளாதார வலிமைக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது’ என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தற்புகழ்ச்சி - புகழாரம் - கூறியிருக்கின்றார்.

ஸ்பெயின் நாட்டிற்கு அவர் சுற்றுப் பயணம் சென்றுள்ளார். அங்கு இந்திய வம்சாவளியினர் கலந்து கொண்ட கூட்டத்தில் பங்கேற்று பேசிய போதே அவர் இப்படி தாம் கையாளும் துறை குறித்து அதிகம் புகழுரைத்துள்ளார்.

‘இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து அனைவராலும் பாராட்டப்படுகிறது.

‘‘ஸ்பெயினின் உலகளாவிய தூதர்களிடம் உரையாற்ற ஒரு வெளிநாட்டு அரசு பிரதிநிதி அழைக்கப்பட்டது இதுவே முதல் முறை. தங்கள் நாட்டின் தூதர்கள் மத்தியில் உரையாற்றும்படி ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சகம் அழைக்கும் போது, அது ஒரு பெரும் கௌரவம் என்பதை உணர வேண்டும்.

இந்தியாவின் இன்றைய நிலைப்பாடு மிகவும் முக்கியமானது. இன்றைய உலகின் நிலைமையைப் பார்க்கும் போது, அனைத்து நாடுகளும் இந்தியாவுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருப்பது தான் தங்கள் நலன் என்று நினைக்கின்றன. நமது புதிய இந்தியா, அதன் பொருளாதார வலிமை மற்றும் தலைமைத்துவம் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

‘‘இன்று, நாம் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இருக்கிறோம், மூன்றாவது பெரிய நாடாக இருக்கத் தயாராக இருக்கிறோம். நமது நிலைப்பாடு, திறன்கள் மற்றும் யோசனைகள் காரணமாக உலகம் நம்மை அறிந்திருக்கிறது. இந்தியா இன்று உலகளாவிய உரையாடல்களுக்கு பங்களிப்பதாக பார்க்கப்படுகிறது.

‘‘ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் பேசக்கூடிய நிலையில் மிகக் குறைவான நாடுகள் மட்டுமே உள்ளன; அதே போலத்தான் இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுடனும் உறவு உள்ளது. குவாட் மற்றும் பிரிக்ஸ் உறுப்பினர்களாகவும் இந்தியா உள்ளது. பிரதமர் மோடியால் இரண்டையும் செய்ய முடிகிறது.’’ - இவ்வாறு தாம் கையாளும் வெளியுறவுத் துறை குறித்து ஜெய்சங்கர் புகழுரைத் திருக்கின்றார்.

இந்தியாவின் வெளியுறவுத்துறை ராஜதந்திரம் சர்வதேச ரீதியில் என்ன புகழ்பெற்றிருந்தாலும் - உச்சம் பெற்றிருந்தாலும் - பிராந்திய ரீதியில் அது ஒன்றும் அப்படித் தம்பட்டம் அடிக்கும் கட்டத்தில் - பீற்றிக் கொள்ளும் நிலையில் - உச்சத்தில் இல்லை. மாறாக, மிகப் பாதிப்பான நிலையில்தான் உள்ளது. நெருங்கிய அயலக ராஜதந்திரம் இந்தியாவைப் பொறுத்தவரை இன்று பெரும் பின்னடைவில் உள்ளது என்பது தான் உண்மை.

தன்னுடைய பிராந்தியத்தில் உபகண்டமான இந்தியா அயல்நாடு எதனுடனும் சொல்லிக் கொள்ளத் தக்க கட்டுறுதியான ராஜதந்திர உறவில் இல்லை என்பதுதான் உண்மை.

பாகிஸ்தான் போல நேரடியாக எதிரி நாடாக இந்தியாவைக் கருதும் நிலையில் மற்றைய அயல்நாடுகள் இல்லாவிடினும், அவை எல்லாவற்றுடனும் இந்தியா முரண்டு பிடிக்கும் ராஜதந்திரத்திலேயே இப்போது நிற்கின்றது என்பது கண்கூடு.

உள்ளதுக்குள் வள்ளிசாக அயல் நாடான இலங்கை நல்லுறவைப் பேணுவது போல காட்டினாலும் சீனாவில் ஒரு காலும் இந்தியாவில் ஒரு காலமாக அது இந்தியாவுக்கு போக்கு காட்டிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா, பூட்டான், நேபாளம், மியான்மார், வங்காளதேசம் ஆகிய நேரடியாகத் தரை ரீதியான அயல்தேசங்களும், இலங்கை, மாலத்தீவு ஆகிய கடல் வழி அயல் தேசங்களும் இன்றைய நிலையில் இந்தியாவுடன் பெருமைப்படத்தக்க அயல் உறவு நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்று கூறுவதற்கு இல்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஸ்பெயினில் போய் நின்று கொண்டு தங்களுடைய வெளியுறவுத்துறை குறித்து புகழாரம் செய்வது ‘உள்ளூரில் ஓணான் பிடிக்க முடியாதவன் உடையார்பாளையம் போய் உடும்பு பிடிப்பான்’ எனக் கூறுவதற்கு ஒப்பானதுதான்.





# கிழக்கு ஆளுநர் தலைமையில் பொங்கல் விழா!

(அபு அலா )

கிழக்கு மாகாண கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தைப்பொங்கல் விழா திருகோணமலை, குச்சவெளி பிரதேச வேலூர் மிட்சு மீள்குடியேற்ற பிள்ளையார் கோவிலில் நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழா இந்து கலாச்சார பழக்கவழக்கங்களின்படி மத சடங்குகள் மற்றும் பண்டைய பழக்கவழக்கங்க முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.





# மல்வத்து ஓயாவில் நீராடச் சென்று காணாமல் போன இளைஞன்!

## தேடும் பணிகள் தொடர்கின்றன





(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மடு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குஞ்சுக்குளம் பிரதேசத்தில் மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (13) மாலை நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள நிலையில் குறித்த இளைஞரை தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் இணைந்து தேடிய போதும் இளைஞன் மீட்கப்படவில்லை.

இளைஞன் காணாமல் போனமை குறித்து மடு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மடு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் இளைஞன் நீராடச் சென்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் தேடுதல்களை மேற்கொண்டனர். சம்பவத்தில் 23 வயதுடைய புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து பேருடன் மடு தேவாலயத்துக்குச் சென்றுவிட்டு மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி மாயமானதாக தெரிவிக்கப்படுகிறது.



# பாலமுனை குடியிருப்பு வீதியில் வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு

(எம். எப். நவாஸ்)

பாலமுனை பிரிவுகளில் குடியேற்ற பிரதேசமாக காணப்படும் 5 ஆம் பிரிவு பிற்பகுதியில் சுமார் 75 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் பயன்படுத்தும் ஒரே ஒரு பாதையாகக் காணப்படும் பாதை வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகிறது. பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் பாடசாலை சீருடையுடன் பாதணி அணிந்து பாடசாலை செல்ல வேண்டிய நிலையில் இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பிரதேச சபையின் செயலாளருக்கு அறிவித்திருந்த நிலையில் அவரும் தொழிநுட்ப உத்தியோகத்தரும் இந்த இடத்தைப் பார்வையிட்டனர்.

இருந்தும் ஆறு மாத காலமாக நீர் வெளியேறுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தித் தரவில்லை. அதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மிகப் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே இந்த இடத்தில் உள்ள நீரை அகற்றுவதற்கான வழிமுறையை கண்டறிந்து உடன் தீர்வு வழங்குமாறு பாடசாலை மாணவர்களின் பெற்றோரும் வேண்டி நிற்கின்றனர்.





# களுத்துறை அஹதியா பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று

களுத்துறை அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, நேற்று செவ்வாய்க்கிழமை (14) களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அஹதியா பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் சிராப் முபஸ்சிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தவிசாளர் உவைஸ் முஹம்மட், ஹைதராபாத் கே.ஐ.எம்.எஸ். வைத்தியசாலையின் பொது முகாமையாளர் சுனில் தெஹ்ரி, களுத்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஆமிர் நாசிர், களுத்துறை உதவி பொலிஸ் அத்தியகட்சர் இனோகா லியானகே, களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் நப்றாஸ் நில்பர், களுத்துறை மாவட்ட அஹதியா சம்மேளனத் தலைவர் உவைன், செயலாளர் ஹிசாம் சுஹைல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.









# இலங்கை சைவநெறிக் கழகத்தின் விஞ்ஞானபாட முன்னோடித் தேர்வு

இலங்கை சைவநெறிக் கழகத்தின் சைவப்பெரியார் சூரன்பெருமானார் கல்விச் செயற்குழு ஏற்பாடு செய்த கல்விப் பொதுத்தராதர சாதாரணதர விஞ்ஞான முன்னோடித் தேர்வு அரப் பொலகந்த தமிழ் மகாவித்தியாலத்தில் கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை களுத்துறை மாவட்டப் பொறுப்பாளர் திருமதி. தம்பிராஜா கோகிலாவின் மேற்பார்வையில் ஆரம்பமானது.

பத்து விடுமுறை நாள்களில் தொடர்ச்சியாகப் பத்துத் தேர்வுத்தாள்கள் நடத்தப்பட்டு, இறுதியில் தேர்வெழுதிய மாணவர்களுக்கு ஆசிரியமாமணி திருமதி சசிமா இரவிக்குமார் ஆசிரியரால் விஞ்ஞானக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.



இந்தத் தேர்வை இலங்கை சைவ நெறிக் கழகப் பொருளாளர் கோ.இளையராஜா முன்னின்று நடத்தினார்.

அதேசமயம், அரப்பொலகந்த பாரதி தமிழ் மகாவித்தியாலயத்தில் தரம் 3,4,5 மாணவர்களுக்கு இலங்கை சைவநெறிக் கழகத்தின் சைவப்பெரியார் சூரன்பெருமானார் கல்விச் செயற்குழுவால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.





# மட்டு. தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வானது தொழில் நுட்பக் கல்லூரியின் முதல்வர் எம். சோமசூரியம் தலைமையில் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை (15) இடம்பெற்றது.

உயர் தொழில் நுட்பத்தினாலான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மூலம் மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழில் நுட்பத்தைக் கற்பதற்கான வழிவகைகள் கல்லூரியில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

நவீன உலகில் புதிய தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கும் புதிய தொழில் முயற்சியாளராக உருவாக்குவதற்கும் மட்டக்களப்பு தொழில் நுட்ப கல்லூரியானது பல வருடங்களாக சேவையை வழங்கி வருகின்றது.

மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான 24 வகையான தொழிற்றுறையில் அறிவை மேம்படுத்தி புதிய விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை வழங்கும் நிறுவனமாக இது செயற்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக ஸ்ரீமத் சுவாமி



நீலமாதவானந்தஜி, அருட்பணி பிறைன் செலர், அம்.ஐ.அப்துல் கபூர் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதம அதிதியாகத் தேசபந்து செல்வராசா கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் உப அதிபர் ஜே.நமோதினி, தொழிற்துறை பகுதித் தலைவர் எஸ் சிவராஜ், எந்திரவியல் பகுதித் தலைவர் எஸ்.உமேஸ்காந், வர்த்தக பகுதித் தலைவர் ஏ. சதானந்தம், பதிவாளர் ரீ.கங்கேஸ்வரன், விரிவுரையாளர்கள், மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொங்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் தைப் பொங்கல் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இடம்பெற்றிருந்தன.









# தேசிய மட்டக் கபடிப் போட்டியில் அல்-அஷ்ரக அணிகள் சாதனை

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்வி அமைச்சுடன் இலங்கை பாடசாலை கபடிச் சங்கம் இணைந்து நடத்திய கபடிப் போட்டிகள் 14, 16, 20 வயது கபடி அணிகளுக்கிடையே கேகாலை வித்தியாலயம் மற்றும் கேகாலை சென்ட் ஜோசப் மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 14, 16, 20 ஆகிய மூன்று வயது பிரிவுகளைச் சேர்ந்த அணிகளும் பங்குகொண்டு மூன்று அணிகளும் வெற்றி வாகை சூடி, பாடசாலைக்கு தேசிய ரீதியில் பெருமை சேர்த்துள்ளனன.

இதில் 16 வயதுப் பிரிவு அணியினர் "கோல்ட் மெடல்" பெற்றதோடு, 14 மற்றும் 20 ஆகிய வயதுப் பிரிவு இரு அணிகளும் "பிரவுன் மெடல்" பெற்றுள்ளன.

16 வயது பிரிவில் பெஸ்ட் பிளேயர் விருதை மாணவன் ஏ.ஆர்.முஹம்மட் அன்ஸக் பெற்றார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச் சென்று வழிப்படுத்திய பிரதம கபடி பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் எஸ்.எம்.இஸ்மத், அர்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட கபடி வீரர்களான கே.எம்.நாபீஸ், எம்.எச்.அபாத், ஏ.ஆர்.ஏ.ஜுமான், எம்.எச்.எம்.சத்தார், எஸ்.எம்.ஸபிஹான் மற்றும் ஏ.சமீன் உட்பட ஆசிரியர்களான ஏ.ஹலீம் அஹமத், எம்.ஐ.எம்.அஸ்மி ஆகியோருக்கும் வழிகாட்டலையும் ஆலோசனைகளை வழங்கிய பாடசாலை முதல்வர் ஏ.அப்துல் கபூர், இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம்.உவைஸ் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.







குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# ஓய்வு பெற்ற அதிபருக்கு பிரியாவிடை!

(றிபாஸ்)

அட்டாளைச்சேனை அல்- மூனீறா பெண்கள் உயர்பாடசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள அதிபர் ஏ. சீ. நியாஸின் சேவை நலன் பாராட்டும், பிரியா விடை நிகழ்வும் பாடசாலையில் நடைபெற்றன.

பிரதியதிபர் எம்.றீ.எம்.சியாத் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லா, பிரதி கல்விப்பணிப்பாளர் ஏ.எச். பௌஸ், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் லண்டன் கலாரசனாவின் 'சங்கமம்'!

## பாலக்காடு ஸ்ரீராமின் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது







யாழ். கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள லண்டன் 'கலா ரசனா'வின் 'சங்கமம்' நிகழ்ச்சியில், இந்தியாவின் பிரபல இசைக்கலைஞர் பாலக்காடு ஸ்ரீராம் கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை 4.30 மணிக்கு இவருடைய இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. பக்கல ராமதாஸ் – வயலின், ஏ.எஸ். ரங்கநாதன் – மிருதங்கம்.

சிறந்த புல்லாங்குழல் கலைஞரான பாலக்காடு ஸ்ரீராம், கர்நாடக 'கீ போர்ட்' இசையிலும் வல்லவர். ஏ. ஆர். ரஹ்மான், இளையராஜா, யுவன் சங்கர் ராஜா முதலான இசையமைப்பாளர்களின் இசையமைப்பில் பிரபலமான பல திரைப்பாடல்களை பாடியவர். 'படையப்பா' திரைப்படத்தின், "வெற்றிக் கொடி கட்டு..." இவருடைய பாடல் ஆகும்.

இந்தச் 'சங்கமம்' நிகழ்ச்சியில் எதிர்வரும் சனிக்கிழமை இரண்டு நடன நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. மாலை 4. 30 மணிக்கு அமெரிக்காவில் வசிக்கும் ஈழத்து நடனக் கலைஞரான கலைமகள் சந்திரசேகரம் அளிக்கும் 'சங்கமும் சுனாமியும்' என்ற ஓரங்க நாட்டிய நாடகம் இடம்பெறவுள்ளது. இது சங்க இலக்கியப் பாடல்களை மையமாக்கித் தமிழர்களின் இன்றைய வாழ்வியலை காண்பிக்கும் வகையில் இடம்பெறவுள்ளது.

பொறியியலாளரான கலைமகள் சந்திரசேகரம், ஹவாட் பல்கலைக்கழக பட்டதாரியாவார். பரதநாட்டியத்தின் பஞ்சநடை தாள முறைமை தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டவர்.

கொக்குவில் 'கலாபவனம்' சுப்பையா மாஸ்ரரிடம் தனது நடன கற்கையை ஆரம்பித்த கலைமகள், ஹேமா ராஜகோபாலன், டாக்டர் பத்மா சுப்ரமண்யம் ஆகியோரிடம் பயின்றவர்.

சங்கமும் சுனாமியும் நிகழ்வைத் தொடர்ந்து, கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் அளிக்கும் 'மனம் சுமந்த வலிகள்' நாட்டிய நாடகம் நடைபெறவுள்ளது. பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையிலான இந்த நாட்டிய நாடகத்தில் முப்பதுக்கு மேற்பட்டோர் பங்குபற்றவுள்ளனர்.

தமிழர்களுடைய வாழ்வியல் இன்பங்களையும் அதில் சூழ்ந்த அவலங்களையும் தத்ரூபமாக காண்பிக்கும் ஓர் உன்னதமான படைப்பாக இது உள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளிலும் தாய்நாட்டிலும் இசை, நடன துறையில் ஆளுமைகொண்ட இளம் தலைமுறையினரை ஒரு மேடையில் ஒருங்கிணைத்து, அதன்மூலம் ஓர் இன உணர்வுப் பேணலை வலுப்படுத்தும் நோக்கில் லண்டனின் 'கலா ரசனா' யாழ். கலாசார மண்டபத்தில் ஆண்டுக்கு இரு தடவைகள் இந்தச் சங்கமம் நிகழ்வை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# களைகட்டும் பாலமேடு ஜல்லிக்கட்டு: 1,000 காளைகள், 900 வீரர்கள் பங்கேற்பு

உலகப் புகழ் பெற்ற மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு இன்று காலை 7.40 மணி அளவில் கோலாகலமாக தொடங்கியது. இதில் 1,000 இற்கும் மேற்பட்ட காளைகளும், 900 இற்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப்புகழ் பெற்றவை. இந்த ஆண்டு பொங்கலை ஒட்டி முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி தை முதல் நாளன்று மதுரை அவனியாபுரத்தில் நேற்று சிறப்பாக நடந்து முடிந்தது.

இந்நிலையில், இன்று காலை பாலமேடு ஜல்லிக்கட்டு தொடங்கியது. இந்தப் போட்டி பாலமேட்டில் அமைந்துள்ள வாடிவாசலில் நடைபெறுகிறது. பாலமேடு கிராம பொது மகாலிங்க மடத்துக் கமிட்டியும் மதுரை மாவட்ட நிர்வாகமும் இணைந்து இந்தப் போட்டியை நடத்துகின்றன. மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்புடன் போட்டி தொடங்கியது. அதன் பிறகு பல்வேறு கோயில்களின் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. தொடர்ந்து போட்டியில் காளைகள் வாடிவாசல் வழியாக அவிழ்க்கப்படுகின்றன. இந்தப் போட்டியை தமிழக பத்திரப் பதிவு மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்.

பல்வேறு சுற்றுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில் ஒவ்வொரு சுற்றுக்கும் பல வண்ண உடையை அணிந்து மாடு பிடி வீரர்கள் பங்கேற்கின்றனர். காளைகள் மற்றும் மாடு பிடி வீரர்களுக்கு உரிய மருத்துவ சோதனை செய்த பிறகே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றனர். விதிமுறைகளை மீறுபவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுகின்றனர்.

இந்தப் போட்டியை காண உள்ளூர் மக்கள் மட்டுமல்லாது வெளியூர், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த பார்வையாளர்களும் பாலமேடு வருகை தந்துள்ளனர். போட்டியில் சிறந்து விளங்கும் காளை மற்றும் மாடு பிடி வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன.



# மகா கும்பமேளா அமிர்தக் குளியல்: பக்தர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

மகர சங்கராந்தி பண்டிகையை யொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை மகா கும்பமேளாவில் நடைபெற்ற முதலாவது அமிர்தக் குளியல் நிகழ்ச்சியில் பங்கேற்ற பக்தர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி

மகா கும்பமேளாவில் பக்தி, ஆன்மீகம் ஆகியவற்றின் அற்புதமான சங்கமம். மகர சங்கராந்தியை முன்னிட்டு மகாகும்பமேளாவில் முதல் அமிர்தக் குளியலில் பங்கேற்ற அனைத்து பக்தர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

குளிர்காலத்தின் முடிவையும் வெப்பமான நாள்களின் தொடக்கத்தையும் குறிக்கும் பண்டிகையான மகர சங்கராந்தியின் விடியல் நெருங்கியபோது, பிரயாக்ராஜில் முதல் அமிர்த ஸ்னானம் (புனித நீராடல்) தொடங்கியது.

கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய வற்றின் சங்கமத்தில் பல லட்சக் கணக்கான பக்தர்கள் குளிரையும் பொருட்படுத்தாமல் புனித நீராடினர். முதல் அமிர்தக் குளியலின் போது 3.5 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் புனித சங்கத்தில் நீராடினர், முதல் இரண்டு நாட்களில் மொத்த பக்தர்களின் எண்ணிக்கை 5 கோடிக்கு மேல் அதிகரித்தது.

மகர சங்கராந்தி சூரிய பகவானுக்கு அர்ப்பணிக்கப்படுவதால், பலர் சூரியனுக்கு அர்க்யத்தை வழங்கினர். புனித நீராடலுக்குப் பிறகு, பக்தர்கள் சடங்குகளைச் செய்து, படித்துறைகளில் பிரார்த்தனை செய்தனர்.

பிரம்ம முகூர்த்தத்திலிருந்து, சூரிய ஒளியின் முதல் கதிர்கள் தண்ணீரைத் தொட்டதில் இருந்து, இரவின் வருகை வரை, பக்தர்களின் இடைவிடாத நீராடல் நடந்தது. வேற்றுமைகளுக்கு இடையேயான ஒற்றுமை மகா கும்பமேளாவின் மிக ஆழமான அம்சங்களில் ஒன்றாக கூறப்படுகிறது.



# அகதிகள் முகாம் மீது வான்வழித் தாக்குதல்

## 6 பேர் பலி





காசாவின் மேற்கு ஜெனின் பகுதியிலுள்ள ஏதிலிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் 15 வயது சிறுவனும் அடங்குவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் குறித்த தாக்குதலைப் பாலஸ்தீன பாதுகாப்புப் படைகள் கண்டித்துள்ளன.

இதற்கிடையில், காசாவின் டெய்ர் அல்-பாலா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# தென்கொரியாவின் ஜனாதிபதி கைது!



பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் அந்த நாட்டு புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கைது செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை நீதிமன்றினால் நீடிக்கப்பட்டது.

இதனையடுத்து அவரை கைது செய்வதற்கு புலனாய்வாளர்கள் முயற்சித்திருந்த நிலையில், அவரது ஆதரவாளர்கள் அதற்கு தடை விதித்திருந்தனர்.

இந்தநிலையில் சுமார் 6 மணிநேர முயற்சிக்கு பின்னர் அவரது வீட்டில் வைத்து யூன் சுக் யோல் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது அவர் ஊழல் விசாரணை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு ஏலவே விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணையை அவர் புறக்கணித்திருந்த நிலையில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, யூன் சுக் யோல் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா? என்பதனை தீர்மானிக்கும் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், அவர் மன்றில் முன்னிலையாகாதமையால் வழக்கு விசாரணை 4 நிமிடங்களில் நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு
பக்கங்கள் 03
புதன்கிழமை 15/01/2025

## கனடாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் பலி

கனடாவின் வோகன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் ஒன்றில் வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்டதில் 02▶



# கட்சித் தலைமை பதவிக்கு போட்டியிடப் போவதில்லை

## தொழில் அமைச்சர் ஸ்டீவன் மெக்கினன் தெரிவிப்பு

லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடப் போவதில்லை என தொழில் அமைச்சர் ஸ்டீவன் மெக்கினன் தெரிவித்துள்ளார். சமூக ஊடக வலைத்தளம் ஒன்றில் இது தொடர்பில் அவர் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

போதிய அளவு கால அவகாசம் இல்லை எனவும் இதனால் பிரசாரம் செய்வதில் நடைமுறைசிக்கல்கள்காணப்படுவதாகவும் மெக்கினன் தெரிவித்துள்ளார். 02▶

# அமெரிக்கா வரி விதித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

## கனடிய நிதி அமைச்சர் டொமினிக் லீபிளான்க் தெரிவிப்பு

அமெரிக்க அரசாங்கம் கனடாவின் ஏற்றுமதிகள் மீது வரி விதித்தால் சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என கனடிய நிதி அமைச்சர் டொமினிக் லீபிளான்க் தெரிவித்துள்ளார்.

எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் கனடாவின் பொருளாதாரத்தை பாதுகாக்கும் வகையிலான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.



எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றிய விரிவான விடயங்களை தற்போதைக்கு வெளிப்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் இருபதாம் திகதி புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவி பிரமாணம் செய்து கொள்ள உள்ளார்.

அதன் பின்னர் வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டால் அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாண முதல்வர்கள் வரிவிதிப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாக அமெரிக்காவுக்கு விநியோகம் செய்யப்படும் மின்சாரத்தை துண்டிப்பதாகவும் எரிபொருட்களை விற்பனை செய்யப் போவதில்லை எனவும் பல்வேறு கருத்துக்களை 02▶



# லிபரல் கட்சி தலைவருக்கு மொழி அறிவு அவசியம்

லிபரல் கட்சியின் அடுத்த தலைவருக்கு மொழி அறிவு அத்தியாவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது பிரதமராக கடமையாற்றி வரும் ஜஸ்டின் ட்ரூடோ லிபரல் கட்சியின் தலைமை பொறுப்பில் இருந்து விலகியதனால், அவரது பதவி வெற்றிடத்திற்கு தெரிவாகும் நபர் பிரிஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழி அறிவு கொண்டவராக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

லிபரல் கட்சி அதிகாரிகள் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் அரச கரும மொழிகளான பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகியன வற்றை பேசக்கூடிய ஒருவரை லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கு பொருத்தமானவர் என சுட்டிக்காட்டி உள்ளனர். முன்னாள் வீடமைப்பு அமைச்சர் சீன் ப்ரேசரும் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் தேர்தலில் தான் போட்டி யிடப் போவதில்லை எனவும் இரு மொழிக் கொள்கையை அத்தியாவசியமானது என்றும் கட்சியின் பல்வேறு உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சுமார் 80 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

விபத்துகுள்ளான வாகனம் ஒன்றில் பயணம் செய்த பெண் ஒருவரே விபத்தில் உயிரிழந்து உள்ளார் என யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் காயமடைந்த பெண் மேகன்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் மற்றும் ஒரு நபர் காயமடைந்திருந்தார் எனவும் அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த வரி விதிப்பு விவகாரம் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது குறித்த தெளிவான விபரங்களை மத்திய அரசாங்கம் வெளியிடவில்லை.

ஏற்கனவே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ லிபரல் கட்சித் தலைமை பதவியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கத்திற்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்பதற்கு அப்பால் இவ்வாறான ஒரு பிரச்சினையை அணுகுவது தொடர்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிட்டு வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, தாம் எதிர்வரும் கட்சி தலைமைத்துவத்திற்கான தேர்தலில் போட்டியிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவரும் பிரதமருமான ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் கட்சித் தலைமை பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இதன்படி லிபரல் கட்சியின் புதிய தலைவர் நியமனம் விரைவில் நடைபெற உள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் கட்சித் தலைவர் பதவி வெற்றிடம் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தலைவராக தெரிவாகும் நபர் நாட்டின் பிரதமராகவும் கடமையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரையில் லிபரல் கட்சி ஆட்சியையும் முன்னெடுக்கும் சாத்தியங்கள் உண்டு எனவும் அதன் பின்னர் பொது தேர்தல் நடைபெற உள்ளது.

எனவே இந்த கட்சி தலைமை பதவி மற்றும் பிரதமர் பதவிக்காக லிபரல் கட்சியில் போட்டியிடுவோரின் எண்ணிக்கை வெகு குறைவாகவே காணப்படுகின்றது.

எனினும், தற்போதைக்கு கட்சியின் தலைமை பதவியில் போட்டியிடுவதற்கு அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்கள் நாட்டம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் வீதியை மறித்து போராட்டம் நடத்தியவருக்கு சிறை

கனடாவில் வீதியை மறித்து போராட்டம் நடத்திய ஒருவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆல்பர்ட்டா மாகாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு இவ்வாறு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு அமெரிக்க கனடிய எல்லை பகுதியில் வீதி போக்குவரத்தை தடை செய்யும் வகையில் இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட இரண்டு பேருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

ஒருவருக்கு நான்கு மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மற்றையவருக்கு 100 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மார்கோ வேன் ஹியுஜினபோஸ் என்ற நபருக்கு நீதிமன்றம் 4 மாத சிறை தண்டனையை விதித்துள்ளது.

ஜெராட் ஜென்சன் என்பவருக்கு நூறு மணித்தியால சமூக சேவையில் ஈடுபடுமாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் இந்த இருவரும் கொவிட் சுகாதார விதிமுறைகளை எதிர்த்து வீதியை மறித்து போராட்டம் நடத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் மேற்படி இருவருக்கும் நீதிமன்ற தண்டனை விதித்துள்ளது.

# தீ விபத்தில் சிக்கியவரை காப்பாற்றிய மாணவன்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் சிறுவர் ஒருவர் தனது உயிரை பணயம் வைத்து மற்றொரு உயிரை காப்பாற்றியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் ஹமில்டன் பகுதியில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. 17 வயதான ஸிகா பாக்ஸ் என்ற பள்ளி மாணவர் இவ்வாறு ஒருவரை காப்பாற்றியுள்ளார்.

நபர் ஒருவரின் வீடு தீப்பற்றிக் கொண்டிருந்த நிலையில், தீ விபத்தில் சிக்கி இருந்தவரை மேற்படி மாணவன் தைரியமாக மீட்டுள்ளார்.

பாதையை கடந்து செல்லும் போது வீடு ஒன்று தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதை அவதானித்ததாகவும் பிளாஸ்டிக் பொருள்கள் எரிந்து கொண்டிருப்பதை உணர முடிந்ததாகவும் அந்த மாணவர் தெரிவித்துள்ளார்.



மேற்படி வீட்டுக்கு அருகாமையில் சென்றபோது ஒருவர் ஆபத்தில் சிக்கி உதவி கோருவதை அவதானித்ததாக தெரிவிக்கின்றார்.

எனவே, மேற்படி மாணவர் மிக வேகமாக எரியும் வீட்டுக்குள் ஆபத்தில் சிக்கி இருந்தவரை மீட்டு வெளியே வந்துள்ளார் என தெரிவிக்கின்றார்.

அதிக அளவு யோசிப்பதற்கு நேரம் இருக்கவில்லை எனவும் தைரியமான தீர்மானத்தை எடுத்து வீட்டுக்குள் புகுந்து பாதிக்கப்பட்டவரை மீட்டதாகவும் அந்த மாணவர் தெரிவிக்கின்றார்.

இந்த சம்பவத்தில் மேற்படி மாணவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.